Classical Tamil Summer Seminar in 2010

Organised by the centre of the École Française d'Extrême-Orient
in Pondicherry, 19th July to 13th of August 2010

A Reader

Preliminary version prepared by Sascha Ebeling and Eva Wilden

Paris, June 2010

Texts

தேவாரம் Tēvāram

The Tēvāram is one of the most important Śaiva bhakti texts in Tamil of the first millennium. It comprises the first seven books of the Pa<u>n</u>niru Tirumu<u>r</u>ai, the Śaiva canon established around the 12th century. It comprises a totality of 798 decades of poems distributed over its three authors Ñā<u>n</u>acampantar (books I-III, 385 *patikam*-s), Appar (books IV-VI, 312 *patikam*-s) and Cuntarar (book VII, 101 *patikam*-s). Dating is controversial, but its beginnings might go back to the 7th century.

Literature:

Subramanya Aiyar, V.M./Chevillard, J.-L./Sarma, S.A.S. 2007: *Digital Tēvāram. Kaṇi<u>n</u>it Tēvāram.* Collection Indologie n° 103, IFP / EFEO, Pondicherry 2007 [CD-ROM].

Gopal Iyer, T.V./ Gros, F. 1984, 1985, 1991: *Tēvāram. Hymnes Śivaïtes du pays tamoul*. Edition, introduction, glossaire. IFP, Pondichéry.

Peterson, I.V. 1989: *Poems to Śiva. The Hymns of the Tamil Saints*. Princeton.

Shulman, D. 1990: *Songs of the Harsh Devotee. – The Tēvāram of Cuntaramūrttināya<u>n</u>ār*. Philadelphia, University of Pennsylvania.

Cutler, N. 1987: *Songs of Experience. The Poetics of Tamil Devotion*. Indiana U.P., Bloomington, Indianapolis.

TE 1.1.3

நீர் பரந்த நிமிர்புன்சடைமேல் ஓர் நிலாவெள்மடி சூடி,
ஏர் பரந்த இனமவெள்வளை சோர, என் உள்ளங் கவர் கள்வன் –
“ஊர் பரந்த உலகில் முதல்ஆகிய ஓர் ஊர் இது” என்னப்
பேர் பரந்த பிரமாபுரம் மேவிய பெமமான் – இவன் அன்றே!

nīr paranta nimir pu<u>n</u> caṭai mēl ōr nilā veḷ mati cūṭi
ēr paranta i<u>n</u>am veḷ vaḷai cōra e<u>n</u> uḷḷam kavar kaḷva<u>n</u>
“ūr paranta ulakil mutal ākiya ōr ūr itu” e<u>n</u><u>n</u>a
pēr paranta piramāpuram mēviya pemmā<u>n</u> iva<u>n</u>, a<u>n</u><u>r</u>ē.

TE 1.2.2

காது இலங்கு குழையன், இழை சேர் திரு மார்பன், ஒருபாகம்
மாது இலங்கு திரு மேனியினான், கருமானினான் உரிஆடை
மீது இலங்க அணிந்தான், இமையோர் தொழ, மேவும் இடம்
சோலை போதில் அங்கு நசையால் வரிவண்டு இசை பாடும் புகலூரே.

kātu ilaṅku ku<u>l</u>aiya<u>n</u>, i<u>l</u>ai cēr tiru mārpa<u>n</u>, oru pākam
mātu ilaṅku tiru mē<u>n</u>iyi<u>n</u>ā<u>n</u>, karu mā<u>n</u>i<u>n</u>ā<u>n</u>, uri āṭai
mītu ilaṅka aṇintā<u>n</u> imaiyōr to<u>l</u>a mēvum iṭam
cōlai pōtil aṅku nacaiyāl vari vaṇṭu icai pāṭum pukalūrē.

TE 1.5.3

தோல் உடையான், வண்ண போர்வையினான், சுண்ணவெண்நீறு துதைந்து, இலங்கு
நூல் உடையான் இமையோர்பெருமான், நுண் அறிவால் வழிபாடு செய்யும்
கால் உடையான், கரிதுஆய கண்டன், காதலிக்கப்படும் காட்டுப்பள்ளி –
மேல் உடையான், இமையாத முக்கண், – மின்இடயாளொடும் வேண்டினானே.

tōl uṭaiyāṉ, vaṇṇa pōrvaiyiṉāṉ, cuṇṇa veḷ nīṟu tutaintu ilaṅku
nūl uṭaiyāṉ, imaiyōr perumāṉ, nuṇ aṟivāl vaḻipāṭu ceyyum
kāl uṭaiyāṉ, karitu āya kaṇṭaṉ kātalikka paṭum kāṭṭuppaḷḷi
mēl uṭaiyāṉ imaiyāta mukkaṇ miṉ iṭaiyāḷoṭum vēṇṭiṉāṉē.

TE 1.5.7

பிறை உடையான், பெரியோர்கள்பெம்மான், பெய் கழல் நாள்தொறும் பேணி எத்த
மறை உடையான், மழுவாள் உடையான், வாரதரு மால்கடல் நஞ்சம உண்ட
கறை உடைனான், கனல் ஆடு கண்ணால் காமனைக் காயந்தவன், காட்டுப்பள்ளிக்
குறை உடையான், குறள்பூதச் செல்வன், குரைகழலே கைகள் கூப்பினோமே!

piṟai uṭaiyāṉ, periyōrkaḷ pemmāṉ, pey kaḻal nāḷtoṟum pēṇi ētta
maṟai uṭaiyāṉ, maḻu vāḷ uṭaiyāṉ, vār taru māl kaṭal nañcam uṇṭa
kaṟai uṭaiyāṉ, kaṉal āṭu kaṇṇāl kāmaṉai kāyntavaṉ, kāṭṭuppaḷḷi
kuṟai uṭaiyāṉ kuṟaḷ pūta celvaṉ kurai kaḻalē kaikaḷ kūppiṉōmē.

TE 2.2.8

தேன் உற்ற நறு மாமலர் சோலையில் வண்டு இனம்
வான் உற்ற நசையால் இசை பாடும் வலஞ்சுழி
கான் உற்ற களிற்றின் உரி போர்க்க வலலீர் சொலீர்
ஊன் உற்ற தலை கொண்டு உலகு ஒக்க உழன்றதே.

tēṉ uṟṟa naṟu mā malar cōlaiyil vaṇṭu iṉam
vāṉ uṟṟa nacaiyāl icai pāṭum valañcuḻi
kāṉ uṟṟa kaḷiṟṟiṉ uri pōrkka vallīr: colīr
ūṉ uṟṟa talai koṇṭu ulaku okka uḻaṉṟatē.

TE 4.13.6
நீரானே தீயானே நெதியானே கதியானே
ஊரானே உலகானே உடலானே உயிரானே
பேரானே பிறை சூடி பிணி தீர்க்கும் பெருமான் என்று
ஆராத ஐயார்க்கு ஆளாய் நான் உய்ந்தேனே.

“nīrāṉē, tīyāṉē, netiyāṉē, katiyāṉē,
ūrāṉē, ulakāṉē, uṭalāṉē, uyirāṉē,
pērāṉē, piṟai cūṭi piṇi tīrkkum perumāṉ” eṉṟu
ārāta aiyāṟarkku āḷ āy nāṉ uyntēṉē.

TE 5.1.5
ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுது எலாம்
என் நாதனை நான் நிலாவி இருப்பன்
தேன் நிலாவிய சிற்றம்பலவனார்
வான் நிலாவி இருக்கவும் வைப்பரே.

ūṉil āvi uyirkkum poḻutu elām
eṉ nātaṉai nāṉ nilāvi iruppaṉ.
tēṉ nilāviya ciṟṟampalavaṉār
vāṉ nilāvi irukkavum vaipparē.

சிலப்பதிக்காரம் 12 Cilappatikāram 12: to Koṟṟavai

The following two verses come from the 12th chant of the first transmitted Tamil epic, the Cilappatikāram. This chant constitutes about the only place where we can find the expression of devotion for a female deity in the literature of the first millennium. Whereas of course godesses are frequently mentioned as consorts or mothers of male deities, they are rarely addressed in their own right.

Literature

Cilappaṭikāram. Ed. + Comm. by U.V. Cāminātaiyar. Chennai 1892. (rep. with glosses Chennai 2001.)

Subramanian, S.V. 1965. *Descriptive Grammar of Cilappatikaaram*. Madras: Paari Nilayam.
Parthasarathy, R. 1993. *The Tale of an Anklet. An Epic of South India*. New York: Columbia University Press.

Ramachandra Dikshitar, V.R. 1997 [[1]1939]. *The Cilappatikaram. Translated with an introduction and notes*. reprint. Chennai: International Institute of Tamil Studies.

முன்றிற் சிறப்பு munṟil ciṟappu

2.
நாகா நாறு நரந்தை நிரந்தன
ஆவு மாரமு மோங்கின வெண்கணுஞ்
சேவு மாவுஞ் செறிந்தன கண்ணுதல்
பாக மாளுடை யாள்பலி முன்றிலே.

nākām nāṟu narantam nirantaṉa,
āvum āramum ōṅkiṉa, eṇkaṇum
cēvum māvum ceṟintaṉa, kaṇ nutal
pākam āḷ uṭaiyāḷ pali muṉṟilē.

3.
செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்
கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன
பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கிளந்
திங்கள் வாழ்சடை யாடிரு முன்றிலே.

cem poṉ vēṅkai corintaṉa, cē' itaḻ
kompar nal ilavaṅkaḷ kuvintaṉa,
poṅkar veḷ pori cintiṉa puṉk', iḷam
tiṅkaḷ vāḻ caṭaiyāḷ tiru muṉṟilē.

அந்தாதி Antātis

The three Antāti-s by Poykaiyāḻvār, Pūtattāḻvār and Peyāḻvār form the earliest part of the Vaiṣṇava bhakti corpus in Tamil, the Nālāyira Tivyappiranpantam ("the divine collection of four thousand"). They might go back to the 6th century and are still composed in the prevalent poetic metre of the time, Veṇpā, whereas the bulk of bhakti poetry makes use of a variety of 'modern' sophisticated metres. An Antāti is a stanzaic poem where each verse begins with the word that had ended the preceding one.

Literature

Mutal, Iraṇṭām, Mūṉṭām Tiruvantāti + maṇipravāḷa vyākyā by Periyavāccaṉpiḷḷai + pratipatam by Rāmānujācāryar. Śrīnikētana Mutrākṣaracālai, Ceṉṉappaṭṭaṉam 1901 (various reprints).

Jekatraṭcakaṉ S. 2002: *Nālāyira Tivyap Pirapantam. The Sacred Book of Four Thousand*. Chennai 2002.

பொய்கையாழ்வார் அருளிச்செய்த முதற்றிருவந்தாதி
poykaiyāḻvār aruḷicceyta mutaṟṟiruvantāti

Poy. 2. (2083)

என்று கடல்கடைந்த தெவ்வுலகம் நீரேற்றது
ஒன்று மதனை யுணரேன்நான் அன்ற
தடைத்துடைத்துக் கண்படுத்த ஆழி இதுநீ
படைத்திடந் துண்டுமிழ்ந்த பார்.

eṉṟu kaṭal kaṭaintatu? ev ulakam nīr ēṟṟatu?
oṉṟum ataṉai uṇarēṉ nāṉ. aṉṟ' at'
aṭaitt' uṭaittu kaṇpaṭutta āḻi, itu nī
paṭaitt' iṭant' uṇṭ' umiḻnta pār.

Poy. 5. (2086)

அரன்நா ரணன்நாமம் ஆன்விடைபுள் ளூர்த்தி
உரைநூல் மறையுறையும் கோயில் வரைநீர்
கருமம் அழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி ஒன்று.

araṉ nāraṇaṉ nāmam āṉ viṭai puḷ ūrtti
urai nūl maṟai uṟaiyum kōyil varai nīr
karumam aḻipp' aḷippu kaiyatu vēl nēmi
uruvam eri kār mēṉi oṉṟu.

Poy. 6. (2087)

ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனைநான்
இன்று மறப்பனோ ஏழைகாள் அன்று
கருவரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை.

oṉṟum maṟant' aṟiyēṉ ōtam nīr vaṇṇaṉai nāṉ
iṉṟu maṟappaṉō ēḻaikāḷ? aṉṟu
karu araṅkatt' uḷ kiṭantu kai toḻutēṉ kaṇṭēṉ
tiruvaraṅkam mēyāṉ ticai.

பேயாழ்வார் அருளிச்செய்த மூன்றாம் திருவந்தாதி
pēyāḻvār aruḷicceyta mūṉṟām tiruvantāti

Pēy. 1. (2282)
திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரி சங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

tiru kaṇṭēṉ, poṉ mēṉi kaṇṭēṉ, tikaḻum
arukkaṉ aṇi niṟamum kaṇṭēṉ, ceru kiḷarum
poṉ āḻi kaṇṭēṉ, puri caṅkam kai kaṇṭēṉ,
eṉ āḻi vaṇṇaṉ pāl iṉṟu.

Pēy. 2. (2283)
இன்றே கழல்கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன்
பொன்தோய் வரைமார்வில் பூந்துழாய் அன்று
திருக்கண்டு கொண்ட திருமாலே உன்னை
மருக்கண்டு கொண்டேன் மனம்.

iṉṟē kaḻal kaṇṭēṉ, ēḻ piṟappum yāṉ aṟuttēṉ,
poṉ tōy varai mārvil pūm tuḻāy aṉṟu
tiru kaṇṭu koṇṭa tirumālē uṉṉai
maru kaṇṭu koṇṭēṉ maṉam.

Pēy. 3. (2284)
மனத்துள்ளான் மாகடல்நீ ருள்ளான் மலராள்
தனத்துள்ளான் தண்டுழாய் மார்பன் சினத்துச்
செருநருகச் செற்றுகந்த தேங்கோத வண்ணன்,
வருநரகம் தீர்க்கும் மருந்து.

maṉatt' uḷḷāṉ, mā kaṭal nīr uḷḷāṉ, malarāḷ
taṉatt' uḷḷāṉ taṇ tuḻāy mārpaṉ, ciṉattu
cerunar uka ceṟṟ' ukanta tēṅk' ōta vaṇṇaṉ
varu narakam tīrkkum maruntu.

திருவாய்மொழி Tiruvāymoḻi

Nammāḻvār’s Tiruvāymoḻi is perhaps the most famous (and most often translated) work contained in the Vaiṣṇava Tivyappirapantam. It constitutes the whole of the last thousand and follows the same principle of Antāti decades. Except for poetic beauty its most remarkable trait is the inventive adaptation of the conventions of Akam (the genre of Classical Tamil love poetry) to a devotional setting. The poet impersonates a girl that finds herself in love with the god, most often in his incarnation of Kṛṣṇa, and pines for her absent lover.

Literature

Tiruvāymoḻi + various urai-s: Ed. by Cē. Kiruṣṇamācāriyar, Nōpil Accukkūṭam, Tiruvallikkēṇi, 5 vol. 1924-1929.

Ramanujan, A.K., 1981, *Hymns for the drowning. Poems for Viṣṇu by Nammāḻvār*, Princeton University Press, Princeton.

Satyamurthi Ayyangar, S., 1981, *Tiruvāymoḻi English Glossary*, translation in 4 volumes, Ananthacharya Indological Research Institute Series No. V-VIII, AIRI, Bombay.

Jekatraṭcakaṉ S. 2002: *Nālāyira Tivyap Pirapantam. The Sacred Book of Four Thousand*. Chennai 2002.

Hardy, F., 1983, *Viraha-Bhakti. The early history of Kṛṣṇa devotion in South India*, Oxford U.P., Oxford, New York.

TVM 1.1.4 (2794)

நாமவ னிவனுவ னவளிவ ளுவளெவள்
தாமவ ரிவருவ ரதுவிது வுதுவெது
வீமவை யிவையுவை யவைநலந் தீங்கவை
ஆமவை யாயவை யாய்நின்ற வவரே.

nām avaṉ ivaṉ uvaṉ avaḷ ivaḷ uvaḷ evaḷ
tām avar ivar uvar atu itu utu etu
vīm avai ivai uvai avai nalam tīṅku avai
ām avai āyavai āy niṉṟa avarē.

TVM 1.4.8 (2831)

நீயலையே சிறுபூவாய் நெடுமாலார்க் கென்றூதாய்
நோயெனது நுவலென்ன நுவலாதே யிருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நா னினியுனது
வாயலகி லின்னடிசில் வைப்பாரை நாடாய்.

nī, alaiyē, ciṟu pūvāy. “neṭum mālārkku eṉ tūtāy
nōy eṉatu nuval” eṉṉa, nuvalātē iruntu oḻintāy.
cāyaloṭu maṇi māmai taḷarntēṉ nāṉ. iṉi uṉatu
vāy alakil iṉ aṭicil vaippārai nāṭāyē.

TVM 2.1.5 (2905)
ஊழிதோ றூழி யுலகுக்கு நீர்கொண்டு
தோழியரும் யாமும்போல் நீராய் நெகிழ்கின்ற
வாழிய வானமே நீயு மதுசூதன்
பாழிமையிற் பட்டவன்கண் பாசத்தால் நைவாயே.

ūḻitōṟu ūḻi, ulakukku nīr koṇṭu,
tōḻiyarum yāmum pōl, nīr-āy nekiḻkiṉṟa
vāḻiya, vāṉamē! nīyum matucūtaṉ
pāḻimaiyil paṭṭu, avaṉkaṇ pācattāl naivāyē.

TVM 3.4.6 (2935)
பாலென்கோ நான்கு வேதப் பயனென்கோ சமய நீதி
நூலென்கோ நுடங்கு கேள்வி யிசையென்கோ இவற்றுள் நல்ல
மேலென்கோ வினையின் மிக்க பயனென்கோ கண்ண னென்கோ
மாலென்கோ மாய னென்கோ வானவ ராதி யையே.

pāl eṉkō, nāṉku vētap payaṉ eṉkō, camaya nīti
nūl eṉkō, nuṭaṅku kēḷvi icai eṉkō, ivaṟṟuḷ nallam
mēl eṉkō, viṉaiyiṉ mikka payaṉ eṉkō, kaṇṇaṉ eṉkō,
māl eṉkō, māyaṉ eṉkō, vāṉavar ātiyaiyē.

TVM 5.1.10 (3242)
ஆனா னாளுடையா னென்றஃதேகொண் டுகந்துவந்து
தானே யின்னருள்செய் தென்னை முற்றவுந்தானானான்
மீனா யாமையுமாய் நரசிங்கமு மாய்குறளாய்
கானா ரேனமுமாய் கற்கியா மின்னங்கார் வண்ணனே.

āṉāṉ āḷ uṭaiyāṉ eṉṟu aḵtē koṇṭu ukantu vantu
tāṉē iṉ aruḷ ceytu eṉṉai muṟṟavum tāṉ āṉāṉ
mīṉ āy āmaiyum āy naraciṅkamum āy kuṟaḷ āy
kāṉ ār ēṉamum āy kaṟki ām iṉṉam kār vaṇṇaṉē.

TVM 6.3.5 (3369)
கைதவஞ் செம்மை கருமை வெளுமையுமாய்
மெய்பொய் யிளமை முதுமைபுதுமை பழமையுமாய்ச்
செய்ததிண் மதிள்சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான்
பெய்தகாவு கண்டீர் பெருந்தேவுடை மூவுலகே.

kaitavam cemmai karumai veḷumaiyum āy
mey poy iḷamai mutumai putumai paḻamaiyum āyc
ceyta tiṇ matiḷ cūḻ tiru viṇṇakar cērnta pirāṉ
peyta kāvu kaṇṭīr perum tēvuṭai mū ulakē.

TVM 7.6.1 (3392)

பாமரு மூவுலகும் படைத்த பற்ப நாபாவோ
பாமரு மூவுலகு மளந்த பற்ப பாதாவோ
தாமரைக் கண்ணாவோ தனியேன் தனியா ளாவோ
தாமரைக் கையாவோ உன்னை யென்றுகொல் சேர்வதுவே.

pā maru mū ulakum paṭaitta paṟpa nāpāvō,
pā maru mū ulakum aḷanta paṟpa pātāvō,
tāmaraik kaṇṇāvō, taṉiyēṉ taṉi āḷāvō,
tāmaraik kaiyāvō, uṉṉai eṉṟu-kol cērvatuvē?

TVM 9.4.5 (3594)

அரியாய அம்மானை யமரர் பிரானை
பெரியானைப் பிரமனை முன்படைத் தானை
வரிவா ளரவினணைப் பள்ளி கொள்கின்ற
கரியான் கழல்காணக் கருதுங் கருத்தே.

ari āya ammāṉai amarar pirāṉai,
periyāṉai, piramaṉai muṉ paṭaittāṉai,
vari vāḷ araviṉ aṇai paḷḷi koḷkiṉṟa
kariyāṉ kaḻal kāṇa karutum karuttē.

TVM 9.9.10 (3370]

மாலையும் வந்தது மாயன் வாரான்.
மாமணி புலம்பவ லேற ணைந்த
கோலநன் னாகுக ளுகளு மாலோ?
கொடியன குழல்களுங் குழறு மாலோ?
வாலொளி வளர்முல்லை கருமு கைகள்
மல்லிகை யலம்பிவண் டாலு மாலோ?
வேலையும் விசும்பில்விண் டலறு மாலோ?
என்சொல்லி யுய்வனிங் கவனை விட்டே?

mālaiyum vantatu māyaṉ vārāṉ.
mā maṇi pulampa val ēṟu aṇainta
kōlam nal nākukaḷ ukaḷum-ālō?
koṭiyaṉa kuḻalkaḷum kuḻaṟum-ālō?
vāl oḷi vaḷar mullai karu mukaikaḷ
mallikai alampi vaṇṭu ālum-ālō?
vēlaiyum vicumpil viṇṭu alaṟum-ālō?
eṉ colli uyvaṉ iṅku avaṉai viṭṭē?

திருக்குறள் Tirukkuṟaḷ

The Tirukkuṟaḷ is today seen by many Tamilians as the very height of Tamil literary creation. It belongs to the genre of didactic poetry and consists of three parts devoted respectively to *aṟam* (dharma), *poruḷ* (wealth) and *iṉpam* (pleasure) – easily recognised as the Sanskrit triad of *dharma, artha* and *kāma*. It is written in short Veṇpā aphorisms of two lines. In the 19th century, before the actual classical corpus was rediscovered, the Kuṟaḷ counted as the most ancient Tamil work. In fact it forms part of the second classical Tamil corpus, the Patiṉeṇ Kīḻkkaṇakku ("the eighteen minor classics") and might go back to about the 6th century. Editions and translations are beyond counting.

Literature

Sundaram Pillai, P.S. 1990: The Kural. (Trans.) Penguin books India.

Gros, F. 1992: *Le livre de l'amour de Tiruvalluvar*. Paris, Gallimard.

10. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரே தவர்.

piṟavi perum kaṭal nīntuvar nīntār
iṟaivaṉ aṭi cērātavar.

42. துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

tuṟantārkkum tuvvātavarkkum iṟantārkkum
ilvāḻvāṉ eṉpāṉ tuṇai.

55. தெய்வந் தொழாஅட் கொழுநன் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

teyvam toḻāaḷ koḻunaṉ toḻutu eḻuvāḷ
pey eṉa peyyum maḻai.

398. ஒருமைக்கண் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

orumaikkaṇ tāṉ kaṟṟa kalvi oruvaṟku
eḻumaiyum ēmāppu uṭaittu.

972. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

pir̲app’ okkum ellā uyirkkum cir̲app’ ovvā
cey tol̲il vēr̲r̲umaiyān̲.

1091. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து.

iru nōkku ivaḷ uṇ kaṇ uḷḷatu. oru nōkku
nōy nōkku on̲r̲u an nōy maruntu.

1109. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

ūṭal uṇartal puṇartal ivai kāmam
kūṭiyār per̲r̲a payan̲.

1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

malar kāṇin̲ maiyātti neñcē ivaḷ kaṇ
palar kāṇum pū okkum en̲r̲u.

1116. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.

matiyum maṭantai mukan̲um ar̲iyā
patiyin̲ kalaṅkiya mīn̲.

1128. நெஞ்சத்தார் காதலவ ராகவெய் துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.

neñcattār kātalavar āka veytu uṇṭal
añcutum vēpākku ar̲intu.

1155. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதால் புணர்வு.

ōmpiṉ amaintār pirivu ōmpal maṟṟu avar
nīṅkiṉ aritu-āl puṇarvu.

1164. காம கடலன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்.

kāma kaṭal maṉṉum uṇṭē. atu nīntum
ēma puṇai maṉṉum il.

1185. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது.

uva kāṇ eṅ kātalar celvār. iva kāṇ eṉ
mēṉi pacappu ūrvatu.

1210. விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி.

viṭāatu ceṉṟārai kaṇṇiṉ-āl kāṇa
paṭāati vāḻi mati.

1227. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை யலருமிந் நோய்.

kālai arumpi pakal ellām pōtu āki
mālai alarum in nōy.

1277. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை.

taṇṇam tuṟaivaṉ taṇantamai nammiṉum
muṉṉam uṇarnta vaḷai.

1330. ஊடற் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

ūṭal kāmattiṟku iṉpam ataṟku iṉpam
kūṭi muyaṅka peṟiṉ.

முத்தொள்ளாயிரம் Muttoḷḷāyiram

The Muttoḷḷāyiram is a late first-millennium collection of Puṟam stanzas praising the kings of the three royal houses (*mūvēntar*). Sadly it does not survive on its own, but just in fragments preserved in one of the later poetic anthologies, the Puṟattiraṭṭu.

Notes

If contained in Niklas 1987, the original text is given as edited there, otherwise it follows the Kaḻakam edition from which also the numbering is taken. Additionally, the numbers used in Niklas 1987 are given in square brackets. For the abbreviations, see the references given below.

Literature

Cēturakunātaṉ, Na. (comm.). 1964. *Muttoḷḷāyiram*. Tirunelvēli: Teṉṉintiya Caivacittānta Nūṟpatippuk Kaḻakam.

Citamparanāta Mutaliyār, Ṭi. Kē. (comm.). 1957. *Muttoḷḷāyiram*. Tirukkuṟṟālam: Potikai Malaip Patippu. [TKC]

Appuswamy, P.N. 1997 [[1]1977]. *Kurinci-p-pattu. Muttollayiram*. Chennai: International Institute of Tamil Studies. [PNA]

Niklas, Ulrike. 1987. *Einführung in das Muttoḷḷāyiram.* unpublished Ph.D. thesis. Cologne: University of Cologne. [number]

Subramaniam, A.V. 1984. *The Bangle and the Javelin [...] transcomposed into English verse*. Madras: Sekar Patippakam. [AVS]

014

மருப்பு ஊசி ஆக, மறம் கனல் வேல் மன்னர்
உரு தகு மார்பு ஓலை ஆக “திரு தக்க
வையகம் எல்லாம் எமது” என்று எழுதுமே
மொய் இலை வேல் மாறன் களிறு.

maruppu ūci āka, maṟam kaṉal vēl maṉṉar
uru taku mārpu ōlai āka “tiru takka
vaiyakam ellām ematu” eṉṟu eḻutum=ē
moy ilai vēl māṟaṉ kaḷiṟu.

117

தாயர் அடைப்ப மகளிர் திறந்து இட
தேய திரிந்த குடுமிய=ஏ ஆய் மலர்
வண்டு உலாஅம் கண்ணி வயம் மான் தேர் கோதையை
கண்டு உலாஅம் வீதி கதவு.

tāyar aṭaippa makaḷir tiṟantu iṭa
tēya tirinta kuṭumiya=ē āy malar
vaṇṭu ulāam kaṇṇi vayam māṉ tēr kōtaiyai
kaṇṭu ulāam vīti katavu.

110
அள்ளல் பழநத்து அரக்கு ஆம்பல் வாய் அவிழ
“வெள்ளம் தீ பட்டது” என வெரீஇ புள் இனம் தம்
கை சிறகால் பார்ப்பு ஒடுக்கும் கவ்வை உடைத்து அரோ
நச்சு இலை வேல் கோ கோதை நாடு.

aḷḷal paḻanattu arakku āmpal vāy aviḻa
“veḷḷam tī paṭṭatu” eṉa verīi puḷ iṉam tam
kai ciṟakāl pārppu oṭukkum kavvai uṭaittu arō
naccu ilai vēl kō kōtai nāṭu.

076
முடி தலை வெள் ஓட்டு மூளை நெய் ஆக
தடித்த குடர் திரி ஆ மாட்டி எடுத்து எடுத்து
பேஎய் விளக்கு அயர்=உம் பெற்றித்து=ஏ செம்பியன்
சேஎய் பொருத களம்.

muṭi talai veḷ ōṭṭu mūḷai ney āka
taṭitta kuṭar tiri ā māṭṭi eṭuttu eṭuttu
pēey viḷakku ayar=um peṟṟittu=ē cempiyaṉ
cēey poruta kaḷam.

072
கொடி மதில் பாய்ந்து இற்ற கோடு=உம், அரசர்
முடி இடறி தேய்ந்த நகம்=உம், பிடி முன்பு
பொல்லாமை நாணி புறங்கடை நின்றது=ஏ
கல் ஆர் தோள் கிள்ளி களிறு.

koṭi matil pāyntu iṟṟa kōṭu=um, aracar
muṭi iṭaṟi tēynta nakam=um, piṭi muṉpu
pollāmai nāṇi puṟaṅkaṭai niṉṟatu=ē
kal ār tōḷ kiḷḷi kaḷiṟu.

009
மைந்தரொடு ஊடி மகளிர் திமிர்ந்து இட்ட
குங்கும ஈர்ம் சாந்தின் சேறு இழுக்கி எங்கு=உம்
தடுமாறல் ஆகிய தன்மைத்து=ஏ தென்னன்
நெடு மாட கூடல் அகம்.

maintaroṭu ūṭi makaḷir timirntu iṭṭa
kuṅkuma īrm cāntiṉ cēṟu iḻukki eṅku=um
taṭumāṟal ākiya taṉmaittu=ē teṉṉaṉ
neṭu māṭa kūṭal akam.

008
நந்தின் இளம் சினை=உம் புன்னை குவி மொட்டு=உம்
பந்தர் இளம் கமுகின் பாளை=உம் சிந்தி
திகழ் முத்தம் போல் தோன்றும் செம்மற்று=ஏ தென்னன்
நகை முத்த வெண் குடையான் நாடு.

nantiṉ iḷam ciṉai=um puṉṉai kuvi moṭṭu=um
pantar iḷam kamukiṉ pāḷai=um cinti
tikaḻ muttam pōl tōṉṟum cemmaṟṟu=ē teṉṉaṉ
nakai mutta veṇ kuṭaiyāṉ nāṭu.

011
நிறை மதி போல் யானை மேல் நீல தார் மாறன்
குடை தோன்ற ஞாலத்து அரசர் திறை கொள்
இறை=ஓ என வந்து இடம் பெறுதல் ஈன்றி
முறை=ஓ என நின்றார் மொய்த்து.

niṟai mati pōl yāṉai mēl nīla tār māṟaṉ
kuṭai tōṉṟa ñālattu aracar tiṟai koḷ
iṟai=ō eṉa vantu iṭam peṟutal īṉṟi
muṟai=ō eṉa niṉṟār moyttu.

066
மாலை விலைபகர்வார் கிள்ளி களைந்த பூ
சால மிகுவது ஓர் தன்மைத்தால் காலை=ஏ
வில் பயில் வானகம் போலும்=ஏ வேல் வளவன்
பொற்பு ஆர் உறந்தை அகம்.

mālai vilaipakarvār kiḻḻi kaḷainta pū
cāla mikuvatu ōr taṉmaittāl kālai=ē
vil payil vāṉakam pōlum=ē vēl vaḷavaṉ
poṟpu ār uṟantai akam.

032
என்னை உரையல் என் பேர் உரையல் ஊர் உரையல்
அன்னை=உம் இன்னள் என உரையல் பின்னை=உம்
தண் படா யானை தமிழ்நர் பெருமாற்கு என்
கண் படா ஆறு=ஏ உரை.

eṉṉai uraiyal eṉ pēr uraiyal ūr uraiyal
aṉṉai=um iṉṉaḷ eṉa uraiyal piṉṉai=um
taṇ paṭā yāṉai tamiḻnar perumāṟku eṉ
kaṇ paṭā āṟu=ē urai.

சிலப்பதிகாரம் Cilappatikāram

Iḷaṅkō Aṭikaḷ's Cilappatikāram is the first of the Tamil poetic epics and might go back, in its earlier parts, to the 5th century. Tamil epic (designated in Tamil as *kāppiyam*, i.e. a derivation from the Sanskrit *kāvya-*) is much closer to a *mahākāvya* than to an epic text such as the Sanskrit Mahābhārata, even though the story as such may come from folkore: The merchant Kōvalam loses his fortune on the courtesan Mātavi, and is forced to set out, in the company of his faithful wife Kaṇṇaki, from his hometown Pukār to Maturai, where by mistake he is taken as a thief and brought to death by the Pāṇṭiya king. Kaṇṇaki takes revenge upon the city and is furthon transformed into a goddess.

Literature

Cilappaṭikāram. Ed. + Comm. by U.V. Cāminātaiyar. Chennai 1892. (rep. with glosses Chennai 2001.)

Kapp, Dieter B. 1993. "Allusions to the Legend in Classical Tamil Literature" *PILC Journal of Dravidic Studies* 3.1: 75-85.

Subramanian, S.V. 1965. *Descriptive Grammar of Cilappatikaaram*. Madras: Paari Nilayam.

Parthasarathy, R. 1993. *The Tale of an Anklet. An Epic of South India*. New York: Columbia University Press.

Ramachandra Dikshitar, V.R. 1997 [[1]1939]. *The Cilappatikaram. Translated with an introduction and notes*. reprint. Chennai: International Institute of Tamil Studies.

Canto 20 lines 48-81, Canto 21 lines 34-61

The following excerpt contains the famous, highly dramatic climax of the story: Kaṇṇaki approaches the king of Maturai in order to demand justice, after her husband Kōvalaṉ has been killed by one of the king's soldiers. When she is ushered into the palace by a gatekeeper, the king addresses her thus:

Canto 20

"நீர்வார் கண்ணை யெம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்"யென
தேரா மன்னா, செப்புவ துடையேன்.
எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்ப
புள்ளுறு புன்கண் தீர்த்தோ னன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணியுகுநீர் நெஞ்சுசுடத், தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே. யவ்வூர்
ஏசாச் சிறப்பி னிசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி,
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்,
சூழ்கழன் மன்னா, நின்னகர்ப் புகுந்திங்கு
என்காற் சிலம்புபகர்தல் வேண்டி, நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி

௬௩ கண்ணகி யென்பதென் பெயரே"யென, "பெண்ணணங்கே
௬௪ கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
௬௫ வெள்வேற் கொற்றங் காண்!"என ஒள்ளிழை
௬௬ "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!
௬௭ என்காற் பொற்சிலம்பு மணியுடை யரியே" யெனத்
௬௮ "தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
௬௯ யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே,
௭0 தருக!" எனத் தந்து தான்முன் வைப்பக்
௭௧ கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
௭௨ மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே, மணிகண்டு
௭௩ தாழ்ந்த குடையன், றளர்ந்தசெங் கோலன்.
௭௪ "பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
௭௫ யானோ வரசன் யானே கள்வன்
௭௬ மன்பதை காக்குந் தென்புலங் காவல்
௭௭ என்முதற் பிழைத்தது. கெடுகவென் னாயுள்"என
௭௮ மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
௭௯ கோப்பெருந் தேவி குலைந்தன ணடுங்கிக்
௮0 "கணவனை யிழந்தோர்க்கு காட்டுவ தில்"லென்று
௮௧ இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி

20S48 "nīr vār kaṇṇai em muṉ vantōy
20S49 yāraiyō nī maṭakkoṭiyōy" eṉa
20S50 tērā maṉṉā, ceppuvatu uṭaiyēṉ.
20S51 eḷ aṟu ciṟappiṉ imaiyavar viyappa
20S52 puḷ uṟu puṉkaṇ tīrttōṉ[1] aṉṟiyum,
20S53 vāyil kaṭaimaṇi naṭu nā naṭuṅka
20S54 āviṉ kaṭai maṇi[2] uku nīr neñcu cuṭa, tāṉ taṉ
20S55 arum peṟal putalvaṉai āḻiyiṉ maṭittōṉ[3]
20S56 perum peyar pukār eṉ patiyē. avvūr
20S57 ēcā ciṟappiṉ icai viḷaṅku perum kuṭi
20S58 mācāttu vāṇikaṉ makaṉai āki,
20S59 vāḻtal vēṇṭi ūḻviṉai turappa,
20S60 cūḻ kaḻal maṉṉā, niṉ nakar pukuntu iṅku
20S61 eṉ kāl cilampu pakartal vēṇṭi, niṉ pāl
20S62 kolaikkaḷap paṭṭa kōvalaṉ maṉaivi
20S63 kaṇṇaki eṉpatu eṉ peyarē" eṉa, "peṇ aṇaṅkē
20S64 kaḷvaṉaik kōṟal kaṭuṅ kōl aṉṟu
20S65 veḷ vēl koṟṟam kāṇ!" eṉa oḷ iḻai
20S66 "nal tiṟam paṭarāk koṟkai vēntē!
20S67 eṉ kāl poṉ cilampu maṇi uṭai ariyē[4]" eṉa
20S68 "tēmoḻi uraittatu cevvai nal moḻi
20S69 yām uṭai cilampu muttu uṭai ariyē,
20S70 taruka!" eṉat tantu tāṉ muṉ vaippa
20S71 kaṇṇaki aṇi maṇi kāl cilampu uṭaippa
20S72 maṉṉavaṉ vāy mutal teṟittatu maṇiyē, maṇi kaṇṭu
20S73 tāḻnta kuṭaiyaṉ, taḷarnta cem kōl-aṉ.

20S74 "poṉ cey kollaṉ taṉ col kēṭṭa
20S75 yāṉō aracaṉ yāṉē kaḷvaṉ
20S76 maṉpatai kākkum teṉ pulam kāval
20S77 eṉ mutal piḻaittatu. keṭuka eṉ āyuḷ" eṉa
20S78 maṉṉavaṉ mayaṅki vīḻntaṉaṉē teṉṉavaṉ
20S79 kōpperuntēvi kulaintaṉaḷ naṭuṅki
20S80 "kaṇavaṉai iḻantōrkku kāṭṭuvatil[5]" eṉṟu
20S81 iṇai aṭi toḻutu vīḻntaṉaḷē maṭamoḻi

Then, Kaṇṇaki continues to give vent to her anger in a speech. She narrates seven legends of women of her own city Pukār who became famous for their virtue. Then she refers to herself:

Canto 21

ஙச .... போல்வார் நீடிய
ஙரு மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்.
ஙசூ பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஙஎ ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்
ஙஅ பட்டிமையுங் காண்குறுவாய் நீ"யென்னா விட்டகலா
ஙகூ "நான்மாட கூடன் மகளிரு மைந்தரும்
ச0 வானக் கடவுளரு மாதவருங் கேட்டீமின்!
சக யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த
சஉ கோநகர் சீறினேன். குற்றமிலேன் யான்"என்று
சங இடமுலை கையாற் திருகி மதுரை
சச வலமுறை மும்முறை வாரா வலமந்து
சரு மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
சசூ விட்டா ளெறிந்தாள் விளங்கிழையாள் வட்டித்த
சஎ நீல நிறத்துத் திரிசெக்கர் வார்சடைப்
சஅ பால்புரை வெள்ளெயிற்றுப் பார்ப்பனக் கோலத்து
சகூ மாலை யெரியங்கி வானவன் றான்றோன்றி
ரு0 "மாபத் தினி,நின்னை மாணப் பிழைத்தநாள்
ருக பாயெரி யிந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ருஉ ஏவ லுடையேனால், யார்பிழைப்பா ரீங்கு"என்ன
ருங "பார்ப்பா ரறவோர் பசுபத் தினிபெண்டிர்
ருச மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
ருரு தீதிறத்தார் பக்கமே சேர்க!"என்று காய்த்திய
ருசூ பொன்றொடி யேவப், புகையழன் மண்டிற்றே
ருஎ நற்றேரான் கூட னகர்.

வெண்பா

ருஅ பொற்பு வழுதியுந்தன் பூவையரு மாளிகையும்
ருகூ விற்பொலியுஞ் சேனையுமா வேழமுங் கற்புண்ணத்,
கூ0 தீத்தரு வெங்கூடற் றெய்வ கடவுளரும்
கூக மாத்துவத் தான்மறைந்தார் மற்று.

21S34 .... pōlvār[6] nīṭiya
21S35 maṭṭu ār kuḻalār piṟanta patip piṟantēṉ.
21S36 paṭṭāṅku yāṉum ōr pattiṉiyē ām ākil
21S37 oṭṭēṉ aracōṭu oḻippēṉ maturaiyum eṉ
21S38 paṭṭimaiyum kāṇkuṟuvāy nī" eṉṉā viṭṭu akalā
21S39 "nāṉ māṭa kūṭal makaḷirum maintarum
21S40 vāṉam kaṭavuḷarum mātavarum[7] kēṭṭīmiṉ[8]!
21S41 yāṉ amar kātalaṉ taṉṉai tavaṟu iḻaitta
21S42 kōnakar cīṟiṉēṉ. kuṟṟam ilēṉ yāṉ" eṉṟu
21S43 iṭa mulai kaiyāl tiruki maturai
21S44 valam muṟai mum muṟai vārā alamantu
21S45 maṭṭu ār maṟukiṉ maṇi mulaiyai vaṭṭittu
21S46 viṭṭāḷ eṟintāḷ viḷaṅku iḻaiyāḷ vaṭṭitta
21S47 nīla niṟattut tiri cekkar vār caṭai
21S48 pāl purai veḷ eyiṟṟu pārppaṉa kōlattu
21S49 mālai eri aṅki vāṉavaṉ tāṉ tōṉṟi
21S50 "mā pattiṉi, niṉṉai māṇa piḻaitta nāḷ
21S51 pāy eri inta pati ūṭṭa paṇṭē ōr
21S52 ēval uṭaiyēṉāl, yār piḻaippār īṅku" eṉṉa
21S53 "pārppār aṟavōr pacu pattiṉi peṇṭir
21S54 mūttōr kuḻavi eṉum ivaraik kaiviṭṭu
21S55 tī tiṟa-tt-ār pakkamē cērka!" eṉṟu kāyttiya
21S56 poṉ toṭi ēva, pukai aḻal maṇṭiṟṟē
21S57 nal tērāṉ kūṭal nakar.

veṇpā

21S58 poṟpu vaḻutiyum taṉ pūvaiyarum māḷikaiyum
21S59 vil poliyum cēṉaiyum mā vēḻamum kaṟpu uṇṇa,
21S60 tī taru vem kūṭal teyva kaṭavuḷarum
21S61 māttuvattāṉ maṟaintār maṟṟu.

Notes

The original text follows the edition by UVC, 8th ed., 1968. Variant readings have been omitted. Please refer to Subramanian 1965 for a glossary (and make sure to look up whatever you cannot find in the glossary also in the extensive Errata section at the end of the book!). The most useful translation into any language is Parthasarathy 1993, a commendable translation into English with an extensive study. Before this appeared, Ramachandra Dikshitar 1997 was the standard work, and it is still useful for its many notes.

1. The phrase *puḷ uṟu puṉkaṇ tīrttōṉ* provides a fine example of intertextuality: It is a formula found in Puṟanāṉūṟu 37.5 and refers to the legend of king Śibi found in the Mahābhārata. "Śibi was a monarch of the solar race and renowned for his kindness to animals. Once a dove fell into his lap and asked him to protect it from the pursuit of a hawk. The hawk demanded of the king either the dove or flesh from his body equal to its weight. The king offered to give his flesh and cut it from his thigh and from other parts of the body. The weight proved unequal to that of the dove. He therefore offered his whole body to be weighed and thereby saved the poor dove from being killed" (Ramachandra Dikshitar 1997: 289, ftn. 2). Allusions to the legend may be found in various classical Tamil texts from Puṟanāṉūṟu to the Mūvarulā (12th c. AD). For further details, see Kapp 1993.

2. Here *kaṭaimaṇi* may be translated as 'edge of the eye ball'.

3. This alludes to a legend found in Paḻamoḻi 93 and in Parimēlaḻakar's commentary on Tirukkuṟaḷ 547. The king Maṉunītikaṇṭa Cōḻaṉ "had his son crushed under the wheels of a chariot, because his own vehicle had accidentally run over a calf, for which its mother, the cow, pleaded for justice by approaching the palace and ringing the bell of justice with its horns" (Ramachandra Dikshitar 1997: 290, ftn. 1).

4. Here and in 20-69 to be translated as 'anklet'.

5. 'Nothing is shown' here seems to mean 'there is no support left'.

6. *pōlvār* refers to the seven exemplary wives.

7. 'Ascetics'.

8. The form *kēṭṭ-ī-miṉ* may be interpreted as a verbal compound with the auxiliary *ī-*, the meaning of which, however, is no longer clear (see Lehmann 1994: 74). So we translate it as a straightforward imperative plural 'Listen!'.

சீவகசிந்தாமணி Cīvakacintāmaṇi

Stanzas 799 – 805 from Canto 3 (Kāntaruvatattaiyār ilampakam).

The Cintāmaṇi, also called “the book of marriages”, is the most famous of the later Tamil epics of the first millennium. It was basically transmitted in Jain circles and thus well out of general literary conciousness, as attested by it first editor U.Vē. Cāminātaiyar. Predominantly it is known for its dense erotic descriptions: the story of prince Cīvakaṉ demands his winning in marriage no less than eight women in a row, before he finally wins back his kingdom from enemy hand, then settles down and seeks salvation in the Jain way. Its original wider impact, however, is betrayed by the fact that it has been honoured by a commentary from one of the most important and prolific commentators of the late middle ages, namely Nacciṉārkkiṉiyar.

The background of the chosen passage:
Kaṭṭiyaḵkāraṉ, the evil minister of young prince Cīvakaṉ’s dead father Caccantaṉ, instigates other kings to fight against Cīvakaṉ for the hand of the beautiful Kāntaruvatattai who is promised to Cīvakaṉ. A furious battle ensues in which opposes the enemy kings ...

Literature

Ryan, James. D. 1985. *The Civakacintamani in Historical Perspective*. unpublished Ph.D. thesis. Berkeley: University of California.

Ryan, James. D. 1998. “Erotic Excess and Sexual Danger in the Cīvakacintāmaṇi”, in: Cort, John E. (ed.). *Open Boundaries. Jain Communities and Cultures in Indian History*. New York: SUNY. pp. 67–83.

Ryan, J.D. 2005: *Cīvakacintāmaṇi. The Hero Cīvakaṉ, the Gem that Fulfills All Wishes* (Verses 1-1165). Jain Publishing Company, Fremont, California.

799

நல் மன வேந்தர் தங்கள் நகை மணி மார்பம் நக்கி,
புல் மன வேந்தர் தங்கள் பொன் அணி கவசம் கீறி
இன் உயிர் கவர்ந்து, "தீமை இனி கொள்ளும் உடம்பினாலும்
துன்னன்மின்" என்பவே போல், சுடு சரம் பரந்த அன்றே.

T0799S1 nal maṉa vēntar taṅkaḷ nakai maṇi mārpam nakki,
T0799S2 pul maṉa vēntar taṅkaḷ poṉ aṇi kavacam kīṟi
T0799S3 iṉ uyir kavarntu, "tīmai iṉi koḷḷum uṭampiṉālum
T0799S4 tuṉṉaṉmiṉ" eṉpavē pōl, cuṭu caram paranta aṉṟē.

800
மீன் எறி தூண்டில் போன்ற வெம் சிலை நாண்கள் அற்ற
தேன் எறி குன்றம் ஒத்த திண் கச்சை துணிந்த வேழம்,
மான் நெறி காட்டும் திண் தேர் கயிறு அற்று மறிய, வேந்தர்
ஊன் எறி ஆழி ஏந்தி, ஒய்யென உலம்பி ஆர்த்தார்.

T0800S1 mīṉ eṟi tūṇṭil pōṉṟa vem cilai nāṇkaḷ aṟṟa
T0800S2 tēṉ eṟi kuṉṟam otta tiṇ kaccai tuṇinta vēḻam,
T0800S3 māṉ neṟi kāṭṭum tiṇ tēr kayiṟu aṟṟu maṟiya, vēntar
T0800S4 ūṉ eṟi āḻi ēnti, oyyeṉa ulampi ārttār.

801
ஆர்ப்பு எதிர், மாரி பெய்யும் அணி நெடும் குன்றம் போல
போர்க்கு எதிர்ந்தவர்-உம் ஆர்த்தார். ஆர்த்தலும் பூண்ட வல் வில்
கார்க்கு எதிர் மேகம் போல கணை மழை கான்றது. இப்பால்
ஈர்த்தது குருதி வெள்ளம். இறைச்சி குன்று ஆக்கினானே.

T0801S1 ārppu etir, māri peyyum aṇi neṭum kuṉṟam pōla
T0801S2 pōrkku etirntavar-um[1] ārttār. ārttalum pūṇṭa val vil
T0801S3 kārkku etir mēkam pōla kaṇai maḻai kāṉṟatu. ippāl
T0801S4 īrttatu kuruti veḷḷam. iṟaicci kuṉṟu ākkiṉāṉē[2].

802
மன்னர்கள் வெகுண்டு, விட்ட மற படை அழுவம் மாரி
கொல் நுனை எஃகின் நீக்கி, குனிந்து வில் பகழி கான்ற
மின் அவிர் இலங்கும் ஒள் வாள் விழித்து உயிர் விழுங்க, இன்ன
தன்மையால் தானை நீந்தி, தான் விளையாடுகின்றான்.

T0802S1 maṉṉarkaḷ vekuṇṭu, viṭṭa maṟa paṭai aḻuvam māri
T0802S2 kol nuṉai eḵkiṉ nīkki, kuṉintu vil pakaḻi kāṉṟa
T0802S3 miṉ avir ilaṅkum oḷ vāḷ viḻittu uyir viḻuṅka, iṉṉa
T0802S4 taṉmaiyāl tāṉai nīnti, tāṉ[3] viḷaiyāṭukiṉṟāṉ.

803
வேழ வெண் கோட்டு மெல் கோல் தின்று, கூன் குருதி வாள்-ஆல்
ஆழ நா வழித்து, நெய்த்தோர் கொப்புளித்து, அழிந்த மாவின்
சூழ் குடர் கண்ணி சூடி, நிணம் துகில் உடுத்து, வெள் என்பு
ஊழ் பெற அணிந்து, சூல் பேய் ஆட, கண்டு உவந்து நக்கான்.

T0803S1 vēḻa veṇ kōṭṭu mel kōl tiṉṟu, kūṉ kuruti vāḷ-āl
T0803S2 āḻa nā vaḻittu, neyttōr koppuḷittu, aḻinta māviṉ
T0803S3 cūḻ kuṭar kaṇṇi cūṭi, niṇam tukil uṭuttu, veḷ eṉpu
T0803S4 ūḻ peṟa aṇintu, cūl pēy āṭa, kaṇṭu uvantu nakkāṉ[4].

804
"வெளிற்று உடல் குருதி வெள்ளம் நிலை இது" என்பவே போல்,
களிற்று உகிர் பிறழ் பல் பேய்கள் கைகளை உச்சி கூப்பி,
அளித்தவை பாடி ஆட, குறு நரி நக்கு, வேழம்

விளித்தன. கழுகும் பாறும் விலா இற்று கிடந்த அன்றே.

T0804S1 "veḷiṟṟu uṭal kuruti veḷḷam nilai itu" eṉpavē pōl,
T0804S2 kaḷiṟṟu ukir piṟaḻ pal pēykaḷ kaikaḷai ucci kūppi,
T0804S3 aḷittavai pāṭi āṭa, kuṟu nari nakku, vēḻam
T0804S4 viḷittaṉa. kaḻukum pāṟum vilā iṟṟu kiṭanta aṉṟē.

805
{கடல் விளை அமுதம்} கண்ட பொழுதின் நெய் கனிந்த தீம் சோற்று
அடிசில் அம் சுவை மிக்கு ஆங்கு, {அண்ணல் அம் குமரன்} ஒன்னார்
உடலின் மேல் திரியும் திண் தேர் காண்டலும், மைந்தர், நெஞ்ச
திடல் பிளந்து இட்ட எஃகம் சுமந்து அமர் திறத்தின் மிக்கார்.

T0805S1 {kaṭal viḷai amutam} kaṇṭa poḻutiṉ ney kaṉinta tīm cōṟṟu
T0805S2 aṭicil am cuvai mikku āṅku, {aṇṇal am kumaraṉ[5]} oṉṉār
T0805S3 uṭaliṉ mēl tiriyum tiṇ tēr kāṇṭalum, maintar[1], neñca
T0805S4 tiṭal piḷantu iṭṭa eḵkam cumantu amar tiṟattiṉ mikkār.

Notes

The original text follows the edition by UVC, 7th ed., 1969. Variant readings have been omitted. For its commentary one may recommend the Kaḻakam edition (1959) in two volumes, where Pulavar 'Aracu' and Pō.Vē. Cōmacuntaraṉār provide a more extensive commentary than UVC's glosses and Nacciṉārkkiṉiyar's commentary contained in the UVC edition. There is, as yet, no no full translation of the epic into any language. Selected portions have been translated into English by James Ryan (1985; 1998) who also plans to publish a full translation eventually.

1. Cīvakaṉ's men.

2. (implicit) subject of *ākkiṉāṉ* is Cīvakaṉ.

3. *tāṉ* refers to Cīvakaṉ.

4. (implicit) subject of *nakkāṉ* is again Cīvakaṉ.

5. (who else but) Cīvakaṉ.

இறையனார் அகப்பொருள், நக்கீரனார் அருளிய உரை, பாயிரம்

Iṟaiyaṉār Akapporuḷ, Nakkīraṉār's urai, pāyiram

The Iṟaiyaṉār Akapporuḷ is the second great treatise on Tamil Akam poetics, a small texts of some sixty *sūtra*-s of perhaps the 7th century. The preamble (added centuries later) contained in the commentary of Nakkīraṉ on the first *sūtra* narrates the legend of the three Caṅkams, that is, the three Tamil academies founded by the Pāṇṭiya kings, alnong with the origin of the treatise and the acceptance of its commentary. The account contains the first list of Old Tamil literary works that has come down to us, among them the full Eṭṭuttokai (though the Pattuppāṭṭu is absent). Here we see one of the earliest bits of Tamil narrative prose, as different from poetic Tamil as from the usual commentary prose.

Literature

Iṟaiyaṉār Akapporuḷ (+ Nakkīraṉ's urai): Ed. by Kaḻakam, Tinnevelly, Rep. 1964.

Buck, D./Paramasivam K. 1997: *The Study of Stolen Love: A Translation of Kaḷaviyal eṉṟa Iṟaiyaṉār Akapporuḷ with Commentary by Nakkīraṉ*. Scholars Press of Atlanta, Georgia 1997.

முச்சங்க வரலாறு

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்.

அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரிஞ்சியூர் முடிநாகரயரும், நிதியின் கிழவனும் என இத் தொடக்கத்தார் ஐஞ்னூற்று நாற்பத்து ஒன்பதின்மார் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடபட்டன எத்துணையோ. பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத் தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்' இயாண்டு சங்கம் இருந்தார் என்பது. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப் பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம் என்ப.

இனி, இடைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோமானும், கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களாற் பாடபட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை அகவலும் என இத் தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமும் என இவை. அவர் மூவாயிரத்து எழுநூற்ற்' இயாண்டு சங்கம் இருந்தார் என்ப. அவரைச் சங்கம் இரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

இனிக், கடைசங்கம் இருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர்கிழாரும், இளந்திருமாறனும், மதுரை ஆசிரியார் நல்லதுவனாரும், மதுரை மருதன் இளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை-நானூறும், குறுந்தொகை-நானூறும், நற்றிணை-நானூறும், புற-நானூறும், ஐங்குறு-நூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதிற்ற்' இயாண்டு என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரை என்ப.

களவியலின் வரலாறு

அக்காலத்து பாண்டியனாடு பன்னீர்' இயாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே, பசிகடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங் கூவி, 'வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கு அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின் ஞான்று என்னை யுள்ளி வம்மின்' என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக், கணக்கின்றிப் பன்னீர்' இயாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்னர், அரசன், 'இனி நாடு நாடாயிற்றாகலின், நூல்வல்லாரைக் கொணர்க' என்று எல்லாப் பக்கமும் ஆட் போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம்', என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று 'என்னை எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமே யெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழல் நிறக் கடவுள் சிந்திப்பான். 'என்னை பாவம்! அரசர்க்குக் கவற்சி பெரிதாயிற்று; அது தானும் ஞானத்திடையது' ஆகலான், யாம் அதனைத் தீர்க்கற் பாலம்' என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழ் இட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான், தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின்கீழ் என்றும் அலகிடாதான் அன்று தெய்வத்துக் குறிப்பினான், 'அலகிடுவென்' என்று, உள்ளங்குளிர அலகிட்டான்; இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ் போந்தன. போதரக், கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்ற்' ஓர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப், பிராமணன் சிந்திப்பான்: 'அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றான் என்பது கேட்டுச் சொல்லாநின்றது உணர்ந்து நம் பெருமான் அருளிச் செய்தானாகும்' என்று தன் அகம் புகுதாதே, கோயிற் றலைக்கடைச் சென்று நின்று, கடைகாப்பார்க்கு உணர்த்தக், கடைக்காப்பார் அரசற்கு உணர்த்த, அரசன் 'புகுதுக' எனப் பிராமணனைக் கூவச், சென்று புக்கு காட்ட, ஏற்றுகொண்டு நோக்கிப், 'பொருளதிகாரம்! இது நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்தானாகற்பாலது!' என்று, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'நம் பெருமான் நமது

இடுக்கண் கண்டு அருளிச் செய்த பொருளதிகாரம், இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்' என அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கல்மாப் பலகை ஏறியிருந்து ஆராய்வுழி, எல்லாரும் தாந்தாம் உரைத்த உரையே நல்லதென்று சில நாளெல்லாஞ் சென்றன.

களவியல் உரை கண்டமை

செல்ல, 'நாம் இங்ஙனம் எத்துணை உரைப்பினும் ஒருதலைபடாது; நாம் அரசனுழைச் சென்று, நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும் என்று கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப் பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக் காண்டும்' என்று, எல்லாரும் ஒருப்பட்டு, அரசனுழைச் சென்றார். அரசனும் எதிர்சென்று, 'என்னை, நூற்குப் பொருள் கண்டீரோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்' என, 'போமின், நுமக்கோர் காரணிகனை யான் எங்ஙனம் நாடுவேன்! நீயிர் நாற்பத்தொன்பதின்மர் ஆயிற்று, நுமக்கு நிகராவார் ஒருவர் இன்மையின் அன்றே' என்று அரசஞ் சொல்லப், போந்து, கல்மாப் பலகை ஏறியிருந்து, 'அரசனும் இது சொல்லினான், யாம் காரணிகனைப் பெறுமாறு என்னைகொல்' என சிந்திப்புழி, 'சூத்திரஞ் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே, அவனையே காரணிகனையுந் தரல்வேண்டும்' எனச் சென்று வரங்கிடத்தும் என்று வரங்கிடப்ப, இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான், பைங்கண்ணன், புன்மயிரன்; ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னனென்று இகழாது கொண்டுபோந்து, ஆசனத்தின்மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும், மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெயல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம். அங்கோர் சாபத்தினால் தோன்றினான்' என முக்கால் இசைத்தகுரல் எல்லார்க்கும் உடன் பாடாயிற்று. ஆக, எழுந்திருந்து, தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரிக் குடிகிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி, 'ஐயனாவான் உருத்திரசன்மனைத் தரல்வேண்டும்' என்று வேண்டிக் கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண்சாந்து அணிந்து, கல்மாப் பலகையேற்றிக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைப்ப, எல்லாரும் முறையே பொருள் உரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதன் இளநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு!' என்றார்.

அதனால், உப்பூரிக் குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனாவான் செய்தது இந்நூற்கு உரை என்பாரும் உளர்; அவர் செய்திலர், மெய்யுரை கேட்டார் என்க. மதுரை ஆலவாயிற் பெருமான் அடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு, குமாரசுவாமியாற் கேட்கப்பட்டது என்க. இனி உரை நடந்து வந்தவாறு சொல்லுதும்:

உரை நடந்து வந்த முறை

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் தேனூர்கிழார்க்கு உரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க்கு

உரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்; அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்கு உரைத்தார்; அவர் திருகுன்றத்தாசிரியர்க்கு உரைத்தார்; அவர் மாதளவனார் இளநாகனார்க்கு உரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை.

muccaṅka varalāṟu

talaiccaṅkam, iṭaiccaṅkam, kaṭaiccaṅkam eṉa mūṉṟu caṅkam irīiyiṉār pāṇṭiyar.

avaruḷ talaiccaṅkam iruntār Akattiyaṉārum, tiripuram eritta viricaṭai kaṭavuḷum, kuṉṟeṟinta Murukavēḷum, Muriñciyūr Muṭinākarayarum, nitiyiṉ kiḻavaṉum eṉa it toṭakkattār aiññūṟṟu nāṟpattu oṉpatiṉmār eṉpa. avaruḷḷiṭṭu nālāyirattu nāṉūṟṟu nāṟpattoṉpatiṉmar pāṭiṉār eṉpa. avarkaḷāṟ pāṭapaṭṭaṉa ettuṇaiyō. Paripāṭalum, Mutunāraiyum, Mutukurukum, Kaḷariyāviraiyum eṉa it toṭakkattaṉa. avar nālāyirattu nāṉūṟṟu nāṟpatiṟṟ(u) yāṇṭu caṅkam iruntār eṉpatu. avarkaḷaic caṅkam irīiyiṉār Kāyciṉavaḻuti mutalākak Kaṭuṅkōṉ īṟāka eṇpattoṉpatiṉmar eṉpa. avar caṅkam iruntu tamiḻārāyntatu kaṭalkoḷḷap paṭṭa maturai eṉpa. avarkku nūl Akattiyam eṉpa.

iṉi, iṭaiccaṅkam iruntār Akattiyaṉārum, Tolkāppiyaṉārum, Iruntaiyūrk Karumkōḻi Mōciyum, Veḷḷūrk Kāppiyaṉum, Ciṟupāṇṭaraṅkaṉum, Tiraiyaṉ Māṟaṉum, Tuvaraik Kōmāṉum, Kīrantaiyum eṉa it toṭakkattār aimpattoṉpatiṉmar eṉpa. avaruḷḷiṭṭu mūvāyirattu eḻunūṟṟuvar pāṭiṉār eṉpa. avarkaḷāṟ pāṭapaṭṭaṉa Kaliyum, Kurukum, Veṇṭāḷiyum, Viyāḻamālai Akavalum eṉa it toṭakkattaṉa eṉpa. avarkku nūl Akattiyamum, Tolkāppiyamum, Māpurāṇamum, Icainuṇukkamum, Pūtapurāṇamum eṉa ivai. avar mūvāyirattu eḻunūṟṟ(u) yāṇṭu caṅkam iruntār eṉpa. avaraic caṅkam irīiyiṉār Veṇṭērc Ceḻiyaṉ mutalāka Muṭattirumāṟaṉ īṟāka aimpattoṉpatiṉmar eṉpa. avaruḷ kavi araṅkēṟiṉār aivar eṉpa. avar caṅkam iruntu tamiḻārāyntatu Kapāṭapurattu eṉpa. akkālattup pōlum pāṇṭiyaṉāṭṭaik kaṭal koṇṭatu.

iṉik, kaṭaicaṅkam iruntu tamiḻārāyntār Ciṟumētāviyārum, Cēntampūtaṉārum, Aṟivuṭaiyaraṉārum, Peruṅkuṉṟūrkiḻārum, Iḷantirumāṟaṉum, Maturai Āciriyār Nallantuvaṉārum, Maturai Marutaṉ Iḷanākaṉārum, Kaṇakkāyaṉār makaṉār Nakkīraṉārum eṉa it toṭakkattār nāṟpattoṉpatiṉmar eṉpa. avaruḷḷiṭṭu nāṉūṟṟu nāṟpattoṉpatiṉmar pāṭiṉār eṉpa. avarkaḷāṟ pāṭappaṭṭaṉa Neṭuntokai-nāṉūṟum, Kuṟuntokai-nāṉūṟum, Naṟṟiṇai-nāṉūṟum, Puṟa-nāṉūṟum, Aiṅkuṟu-nūṟum, Patiṟṟuppattum, nūṟṟaimpatu Kaliyum, eḻupatu Paripāṭalum, Kūttum, Variyum, Ciṟṟicaiyum, Pēricaiyum eṉṟu it toṭakkattaṉa. avarkku nūl Akattiyamum, Tolkāppiyamum eṉpa. avar caṅkam iruntu tamiḻārāyntatu āyirattu eṇṇūṟṟu aimpatiṟṟ(u) yāṇṭu eṉpa. avarkaḷaic caṅkam irīiyiṉār kaṭalkoḷḷappaṭṭup pōntirunta Muṭattirumāṟaṉ mutalāka Ukkirap Peruvaḻuti īṟāka nāṟpattoṉpatiṉmar eṉpa. avaruṭ kavi araṅkēṟiṉār mūvar eṉpa. avar caṅkam iruntu tamiḻārāyntatu uttaramaturai eṉpa.

Kaḷaviyaliṉ varalāṟu

akkālattu pāṇṭiyaṉāṭu paṉṉīr(u) yāṇṭu vaṟkaṭañ ceṉṟatu. cellavē, paci kaṭukutalum, aracaṉ ciṭṭarai ellām kūvi, 'vammiṉ, yāṉ uṅkaḷaip puṟantara killēṉ; eṉ tēyam peritum varuntukiṉṟatu; nīyir numakku aṟintavāṟu pukku, nāṭu nāṭ' āyiṉ ñāṉṟu eṉṉai uḷḷi vammiṉ' eṉṟāṉ. eṉa, aracaṉai viṭuttu ellārum pōyiṉa piṉṟaik, kaṇakk' iṉṟi paṉṉīr(u) yāṇṭu kaḻintatu. kaḻinta piṉṉar, nāṭu maliya maḻai peytatu. peyta piṉṉar, aracaṉ, 'iṉi nāṭu nāṭ' āyiṟṟ' ākaliṉ, nūl vallāraik koṇarka' eṉṟu ellāp pakkamum āḷ pōkka, eḻutt' atikāramum col atikāramum yāpp' atikāramum vallārai talaippaṭṭu koṇarntu, 'poruḷ atikāram vallārai eṅkum talaippaṭṭilēm', eṉṟu vantār. vara, aracaṉum puṭaipaṭa kavaṉṟu 'eṉṉai eḻuttum collum yāppum ārāyvatu poruḷ-atikārattiṉ poruṭṭ' aṉṟē. poruḷ-atikāram peṟēmē eṉiṉ, ivai peṟṟum peṟṟilēm' eṉa collāniṟpa, Maturai Ālavāyil aḻal niṟak kaṭavuḷ cintippāṉ. 'eṉṉai pāvam! aracarkku kavaṟci perit' āyiṟṟu; atu tāṉum ñāṉatt' iṭaiyat' ākalāṉ, yām ataṉait tīrkkaṟ pālam' eṉṟu, iv aṟupatu cūttirattaiyum ceytu mūṉṟu ceppitaḻ akattu eḻuti pīṭattiṉ kīḻ iṭṭāṉ.

iṭṭa piṟṟai ñāṉṟu, tēvar kulam vaḻipaṭuvāṉ, tēvar kōṭṭattai eṅkum tuṭaittu, nīr teḷittu pū viṭṭu pīṭattiṉ kīḻ eṉṟum alakiṭātāṉ aṉṟu teyvatattuk kuṟippiṉāṉ, 'alakiṭuveṉ' eṉṟu, uḷḷaṅkuḷira alakiṭṭāṉ; iṭṭāṟku av alakiṉōṭum itaḻ pōntaṉa. pōtara, koṇṭu pōntu nōkkiṉāṟku vāypp' uṭaitt' āyiṟ'[1] ōr poruḷ-atikāram āy kāṭṭiṟṟu. kāṭṭa, pirāmaṇaṉ cintippāṉ: 'aracaṉ poruḷ-atikāram iṉmaiyiṉ kavalkiṉṟāṉ eṉpatu kēṭṭu collāniṉṟatu uṇarntu nam perumāṉ aruḷi ceytāṉ ākum' eṉṟu taṉ akam pukutātē, kōyil talaikkaṭai ceṉṟu niṉṟu, kaṭai kāppārkku uṇartta, kaṭai kāppār aracaṟku uṇartta, aracaṉ 'pukutuka' eṉa pirāmaṇaṉai kūva, ceṉṟu pukku kāṭṭa, ēṟṟu koṇṭu nōkki, 'poruḷ-atikāram! itu nam perumāṉ namatu iṭukkaṇ kaṇṭu aruḷi ceytāṉ ākal pālatu!' eṉṟu, at ticai nōkki toḻutu koṇṭu niṉṟu, caṅkattārai kūvuvittu, 'nam perumāṉ namatu iṭukkaṇ kaṇṭu aruḷi ceyta poruḷ-atikāram, itaṉai koṇṭu pōy poruḷ kāṇmiṉ' eṉa avarkaḷ ataṉai koṇṭu pōntu kalmāp palakai ēṟi iruntu ārāyvuḻi, ellārum tām tām uraitta uraiyē nallat' eṉṟu cila nāḷ ellām ceṉṟaṉa.

kaḷaviyal urai kaṇṭamai

cella, 'nām iṅṅaṉam ettuṇai uraippiṉum orutalaipaṭātu; nām aracaṉuḻai ceṉṟu, namakk' ōr kāraṇikaṉai taral vēṇṭum eṉṟu koṇṭu pōntu, avaṉāṉ poruḷ eṉa paṭṭatu poruḷ āy, aṉṟ' eṉappaṭṭatu aṉṟ' āy oḻiya kāṇṭum' eṉṟu, ellārum oruppaṭṭu, aracaṉuḻai ceṉṟār. aracaṉum etir ceṉṟu, 'eṉṉai, nūṟku poruḷ kaṇṭīrō?' eṉa, 'atu kāṇumāṟu emakk' ōr kāraṇikaṉai taral vēṇṭum' eṉa, 'pōmiṉ, numakk' ōr kāraṇikaṉai yāṉ eṅṅaṉam nāṭuvēṉ! nīyir nāṟpattoṉpatiṉmār āyiṟṟu, numakku nikarāvār oruvar iṉmaiyiṉ aṉṟē' eṉṟu aracan colla, pōntu, kalmāp palakai ēṟi iruntu, 'aracaṉum itu colliṉāṉ, yām kāraṇikaṉai peṟumāṟu eṉṉai-kol' eṉa cintippuḻi, 'cūttiram ceytāṉ Ālavāyil avir caṭai kaṭavuḷ aṉṟē, avaṉaiyē kāraṇikaṉaiyum taral vēṇṭum' eṉa ceṉṟu varaṅkiṭattum eṉṟu varaṅkiṭappa, iṭai yāmattu, 'iv ūr Uppūrikuṭi kiḻār makaṉ āvāṉ Uruttiracaṉmaṉ eṉpāṉ, paim kaṇṇaṉ, puṉ mayiraṉ; ai āṭṭai pirāyattāṉ, oru mūṅkaippiḷḷai uḷaṉ; avaṉai aṉṉaṉeṉṟu ikaḻātu koṇṭupōntu, ācaṉattiṉ mēl irīik kīḻiruntu cūttirap poruḷ uraittāṟ kaṇṇīr vārntu meymmayir cilirkkum, meyyāyiṉa urai kēṭṭaviṭattu; meyallā urai kēṭṭaviṭattu vāḷā irukkum; avaṉ kumāra teyvam. aṅk' ōr cāpattiṉāl tōṉṟiṉāṉ' eṉa muk kāl icaitta kural ellārkkum uṭaṉpāṭ' āyiṟṟu. āka, eḻunt' iruntu, tēvar kulattai valaṅkoṇṭu pōntu, Uppūrik Kuṭikiḻāruḻai caṅkam ellām ceṉṟu, iv vārttai ellām colli, 'aiyaṉ āvāṉ uruttiracaṉmaṉait taral vēṇṭum' eṉṟu vēṇṭi koṭu pōntu, veḷiyatu uṭīi, veḷ

1 Read: *vāyppu uṭaittu āyiṟṟu* or *vāy puṭaittu āyiṟṟu*.

pū cūṭṭi, veḷ cāntu aṇintu, kalmāp palakai ēṟṟi kīḻiruntu cūttirap poruḷ uraippa, ellārum muṟaiyē poruḷ uraippa kēṭṭu vāḷā iruntu, Maturai Marutaṉ Iḷanākaṉār uraittaviṭattu orō iṭattu kaṇṇīr vārntu, meymmayir niṟutti, piṉṉark Kaṇakkāyaṉār makaṉār Nakkīraṉār uraittaviṭattu patantoṟum kaṇṇīr vārntu, meymmayir cilirppa iruntāṉ. iruppa, ārpp’ eṭuttu, 'mey urai peṟṟām in nūṟku!' eṉṟār.

ataṉāl, Uppūrik Kuṭikiḻār makaṉāvāṉ Uruttiracaṉmaṉāvāṉ ceytatu in nūṟku urai eṉpārum uḷar; avar ceytilar, meyyurai kēṭṭār eṉka. Maturai Ālavāyiṟ perumāṉ aṭikaḷāṟ ceyyappaṭṭa nūṟku Nakkīraṉārāl urai kaṇṭu, Kumāra cuvāmiyāṟ kēṭkappaṭṭatu eṉka. iṉi urai naṭantu vantavāṟu collutum:

urai naṭantu vanta muṟai

